


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவாயுறும் நிலம்

அன்புடன்
பேராசிரியர்
கா. சிவத்தம்பி அவர்களுக்கு

10408. SE

மண்ணின் சிறகுகளால் பறத்தல்
பற்றியதான கவிதைகள்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

முல்லை முஸ்ரிபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவாவுறும் நிலம்
கவிதைகள் திரட்டு
முல்லை முஸ்ரிபா

AWAVURUM NILAM
Collection of Poems
By Mullai Musrifa

© மஃரிபா மஃஸூர்
'முல்லை இல்லம்',
பெருக்குவற்றான்,
கொத்தாந்தீவு, இலங்கை

© Mahrifa Mahzoor
'Mullai Illam'
Perukkuwattan,
Kottantivu, Sri Lanka.
musrifa100@gmail.com

முதற்பதிப்பு: நவம்பர்–2009
பக்கங்கள்: xii + 103
வெளியீடு: வெள்ளாப்பு வெளி,
198/30 ஜும்ஆ மஸ்ஜித் வீதி,
கொழும்பு – 10
அவாவுகை: 200.00

Fist Edition: Nov.2009
Pages: xii + 103
Publishers: Wellppuweli
198/30, Jumma Masjid Rd,
Colombo - 10
wellappuweli@yahoo.com
ISBN: 978-955-0280-00-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளாப்பு வெளி

'வடிவமற்ற ஒவ்வொன்றும் தனக்கான வடிவத்தைத்தேடிக் கொண்டேயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துயர் மண்டிய சுவடுகளில் காணாமல் போன காலடிகளை
அவாவுறும் என் நிலத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலரிச் சொற்கள்

'வடிவமற்ற ஒவ்வொன்றும் தனக்கான வடிவத்தைத் தேடிக் கொண்டேயிருக்கும்' என்றார் கலீல் ஜிப்ரான். வடிவங்களைத் தேடிக்கொண்டிருக்கும் விளிம்புநிலை மாந்தரின் கேவலைச் சுமந்து பறப்பதற்கான சிறகுகளை புலரிச் சொற்களால் வரைந்து பார்க்க வெள்ளாப்பு வெளி அவாக் கொள்கிறது.

அந்த அவாவுதலின் தொடக்கமாகவே முல்லை முஸ்ரிபாவின் அலாவுறும் நிலம் வெளிவருகிறது. தொண்ணூறுக்குப் பின்னரான முஸ்லிம் தேசக் கவிதை களை அடையாளப்படுத்தும் கவிஞர்களுள் முக்கிய மான ஒருவராக முஸ்ரிபா அடையாளப்படுகிறார்.

முஸ்ரிபா வதைபட்டுச் சிதைகிற வாழ்வின் மீதான கவிதைகளாக இருத்தலுக்கான அழைப்பை வெளியேற் றப்பட்ட வடக்கு முஸ்லிம்களின் குரலாகப் பதிவு செய்தவர். அதற்காக 2003ம் வருடத்துக்கான தேசிய சாகித்திய விருது, வடக்கு கிழக்கு இலக்கிய விருது களைத் தனதாக்கியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தொகுதியிலுள்ள 'மீதம்' கவிதை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான தமிழ் மொழியும் இலக்கியமும் பாட நூலில் உள்வாங்கப்பட்டுள்ளமை இவரது கவிதை ஆளுமைக்கான சான்றாகும்.

கல்விப் புலத்தில் மொழித்துறை விரிவுரையாளர், வளவாளர், முதன்மை ஆசிரியர் என வகிபாகங்களைக் கொண்டவர். இலங்கை அதிபர் சேவையில் உள்ளீர்க் கப்பட்டுள்ளார். இலங்கை வானொலியின் ஒலிபரப் பாளர், சமூக இயங்கியலாளர். இப்படி பன்முகம் காட்டும் முஸ்ரிபாவின் கவிதை முகமே இவருக்கான முகவரியாகவும் அமைகிறது.

வடக்கு முஸ்லிம்களின் வாழ்வியல் பேசும் இவரது கவிதைகள் பெரும் சொல்லாடலுக்கான வாசல்களைத் திறக்கிறது என்ற வகையில் ஒரு வரலாற்று ஆவண மாகவும் திகழ்கிறது.

*வெள்ளாப்பு வெளி*
***2009 ஒக்டோபர் 28***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேரனின் சொற்கள்

### முல்லைக் கவிஞனின் உயிர்மொழி

முல்லை முஸ்ரிபாவின் கவிதைகள் முல்லைத்தீவில் அவருக்கு மறுக்கப்பட்ட வாழ்வையும் கனவையும் மட்டுமே பேசுவன அல்ல. அந்த வாழ்வும் அந்த மண்ணிலே ஆழ வேரோ டியிருந்த அவரதும் அவர் போன்ற ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்களின் வரலாறும் தமிழீழ விடுதலைப் புலிகளால் தூக்கி வீசப்பட்டாலும் முஸ்ரிபாவினதும் அவரது தேசிய இனத்தின தும் உயிர் மூச்சையும் புது வரலாற்றையும் இலக்கியமும் கவிதை யும் அணையாமல் முன்னெடுக்கின்றன.

முல்லை முஸ்ரிபாவின் கவிதைகளுக்கு முன்னுரையாகச் சில வார்த்தைகள் எழுதுகிறபோது வலி ஒருபுறம்; வெட்கம் மறுபுறம்; முன்னுரைக்கான அழைப்பை அவர் தந்தபோது எழுந்த அடக் கத்துடன் கூடிய பெருமிதம் இன்னொருபுறம் என உணர் வின்அலைகள் என்னைச் சூழ்கின்றன.

கவிதைத் தொகுதிகளுக்கு முன்னுரைகள் தேவையில்லை என்பதே என்னுடைய கருத்தாக இருந்து வருகிறது. எனினும், பல்வேறு கவிஞர்களின் தொகுதிகளுக்கு முன்னுரை எழுத நேர்ந்திருக்கிறது. அப்படி எழுதுகிறபோது இலக்கிய விமரிசகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது கவிதையின் உபாசகன் என்ற ஒளிவட்டத்தைத் தவிர்த்து விடுவது பொருத்தமானதும் நியாயமானதும் என்று நான் கருதுகிறேன்.

அப்படியானால் ஒரு முன்னுரைக்கு எத்தகைய இணக்கப்பாடு இருக்க முடியும் என்ற கேள்வி பெரிதாக எழுகிறது.

இலக்கிய வரலாற்றிலும் அரசில் வரலாற்றிலும் அரசியல் இலக்கிய வரலாற்றிலும் பல தளங்களிலும் சிறப்பும் தனித் தன்மையும் வரலாற்று முக்கியத்துவமும் வாய்க்கப்பெற்ற தொகுதிகளை எதிர்கொள்கிறபோது அவை பற்றிய சில வார்த்தைகள் எழுதிக் கோடிட்டுக் காட்டுவது பொருத்தமானது. கூடவே, முல்லை முஸ்ரிபாவின் கவிதைக் குரலுடனும் உறவுக் குரலுடனும் உணர்வுத் தோழமையைக் காட்டுவதற்காகவும் இந்த முன்னுரை மிக இயல்பான ஒரு பாலமாகவும் மாறிவிடுகிறது.

அரசியல்வாதிகளும் தமிழ் இயக்கங்களும் செய்யாத - அவர்களால் செய்ய முடியாத அல்லது அவர்கள் செய்ய மறுத்த - உணர்வுத் தோழமையையும் அரசியல் இணக்கத்தையும் பல முஸ்லிம், தமிழ்க் கவிஞர்கள் முன்னெடுத்து வருவது நமது நெடுங் கால நல்லுறவுக்கும் அரசியல் சமத்துவத்துடன் கூடிய தனித்துவம் பேணுகிற ஒருங்கிணைவுக்கும் வளமான அடித்தளத்தை ஏற் படுத்துகிறது. அந்த வகையில் கவிஞனாக இருப்பது என்பது இன் றைய ஆறாத் துயரிலும் மகிழ்ச்சியையும் நம்பிக்கைச் சுடரையும் தருகிறது.

முல்லை முஸ்ரிஃபாவின் கவிதைகளில் தாகம், ஏக்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிருப்தி, துயர் மண்டிய வாழ்வு பற்றிய கோலங்கள் கவிதா இழைகளாக இருந்தாலும், வாழ்வின் மீதான ஈரக் காதலையும் நளினத்துடனும் நம்பிக்கையுடன் அவர் எங்களுக்குத் தருகிறார். அவருக்குரிய மிகவும் அழகான கவிதைக் கோலம் எதுவென்றால், பாரதி கூறியது போல 'விட்டு விடுதலையாகி நிற்கும் ஒரு சிட்டுக் குருவி' முகம்தான்.

அவருடைய இனிய மொழியில் சொல்வதானால் அவர் ஒரு எதிர்ப்பிசைக் குருவி. நல்ல கவிஞன் எதிர்ப்பிசைக் குருவியாக அன்றி ஒத்தோடிக் குருவியாகவா இருக்க முடியும்?

'கோலமிழக்கும் தெருவின் வரைபடங்களும்', மழைக் கவிதையும் முஸ்லிம்-தமிழ் உறவின் கவிதைக் கண்ணிகளும் இடையறாது விரவிக் கிடக்கும் இந்தக் கவிதைகள் அவலத்தையும் இசையையும், கோபத்தையும், நம்பிக்கைகயையும் மாறி மாறித் தருகின்றன. எங்களுடைய காலத்தில் கவிதையின் பணி இவ்வாறு மாறிவிட்டமை இன்னொரு சோகம்தான்.

'உயிர்மொழி மறுக்கப்படுகையில்
முகமூடி மொழி அணியும் அவாவற்றவன்'

என்று எழுதுகிற முல்லை முஸ்ரிபாவின் வீரம் செழுமை வாய்ந்தது; மறுத்தோடுவது. இடையறாது தேடுவது; அவாவுறுவது. உயர்ந்த கவிதைக்கு இவையனைத்தும் தேவையல்லவா?

சேரன்

**2009 நவம்பர் 07**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீத் தூய்மையான வெண்மையான சொற்கள்

மண்ணின் சிறகுகளால் பறந்து கொள்ளும்போது மனதில் ஆழத் துயரும் அதையும் விஞ்சிய ஆனந்தமும் தொற்றிக் கொள்கிறது. அதனையே கவிதைகளில் பதிவு செய்து வந்திருக்கிறேன்.

என்னையும் அகதியாக்கிய மூன்று தசாப்த கால யுத்த நீட்சியில் முடிவுப் புள்ளியிலிருந்து திரும்பிப் பார்க்கிறேன். கண்கள் இரத்தத்தில் தோய்கின்றன. குறுந்தேசியவாதம், இனவாதம், பேரினவாதம், பெருந்தேசியவாதம் கடந்த பொதுத் தேசியக் குரலை பல்லினத் தொகுதியினராகிய நாம் எழுப்ப வேண்டும். கவிதைகளிலும் இனி அதுவே ஒலிக்க வேண்டும் போல் தோன்றுகிறது.

எல்லாவற்றுக்குமாக மிகத் தூய வெண்மையான சொற்களிலிருந்து எமது கதையாடலைத் தொடங்க வேண்டும் என்கின்ற அவாவே எனதும் என் நிலத்தினதும். எல்லோருடையதுமான அவாவாக அதுவே இருத்தல் வேண்டும் எனபதே எனது அவாவும்.

*முல்லை முஸ்ரிபா*
***2009 நவம்பர் 11***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியின் சொற்கள்

முன்னுரை எழுத்து கவிஞர் சேரன்

அட்டை வடிவமைப்பு அஸீஸ் நிஸாருத்தீன்

தளக் கோலம் கிண்ணியா அனீஸ்

அப்துல்லா அஸ்ஸாம், ஜெம்ஸித் அஸீஸ் உள்ளிட்ட
எங்கள் தேசம் குழுமத்தினர்

நட்புடன்; எஸ். காண்டீபன், என். ஜெயசீலன்

அன்புடன் என் குழந்தைகள்;
அஹ்மத் ஷெளகி, மிதா மர்யம் ஆகியோருக்கும்
வெள்ளாப்பு வெளி செயற்பாட்டாளர்களுக்கும்

கவிதைகளின் விளை நிலங்களான...
யாத்ரா, மூன்றாவது மனிதன், பூர்வீகம், ஞானம், அஸாருல் ஜஸீரா, எங்கள் தேசம், மீள்பார்வை, தினகரன், வீரகேசரி, விடிவெள்ளி என்பவற்றுக்கும்


என் மண்ணின் முகங்களுக்கும் நன்றியின் சொற்கள் உரியன.

மீதமாயிருக்கும் நன்றி
என்னை வருத்தும் முட்களுக்கும்
வருடும் பூக்களுக்கும் சொந்தமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதையின் சொற்கள்

தொலைகின்றன சொற்கள்
தேடிப் பொருத்துகிறேன்



மனதில்
அலைகிறது கவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நரம்பு சுண்டிய யாழ்

நரம்பறுந்த யாழின் இசையென
உன் இரத்தல் பா
செவி படர்ந்திற்று

பசியை இசையாய் நீ இறக்கிய
வெய்யிற் பொழுதில்
அத்தனை சோடிக் காதுகளாலும்
முழுச் செவிடாய்
உன்னைக் கடக்கும் பெரும் வீதி

என் செவியிற் படர்ந்திற்று
உன் இரவுப் பா

உன் அருகு நின்ற கணங்களில்
என் நரம்புகள் மொத்தமும் உருகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன யாழின் கவி
காற்று வெளியும் கடந்து போயிற்று

உன் இரங்கற் பா
செவியாதோரைக் காணவொண்ணா
விழிகளுக்குள்
என்னை மட்டுமாய் அழைத்தாய்
குரல் கம்மிய யாழின் இசையாய்

என் நரம்பு சுண்டிய
நரை மண்டிய யாழே
அறுந்து போயிற்று அக்கணம்
என் மனம்


உன் செவியுறு யாழின் கனவுகள்
இனி எவரெவர் வசம்

ஓர் இசையிழந்த காற்றின் மரிப்பில்
ஒப்பாரி கேட்டபடியிருக்கிறது
நெஞ்சுள்
அப்பக்கம் நான் போகுந் தோறும்
எப்போதும்

என் நரம்பு சுண்டிய
நரை மண்டிய யாழே
நீ
காற்றில் எதை எழுதிச் சென்றனை

2003 மே 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹயாத்தும்மா

ஹயாத்தும்மா உனது மௌத்து
எனது ஆத்மாவைத் துயருறுத்திற்று

நீ நெய்த கனவுகள்
நெய்தல் அலைகளில் கரைந்து அழிகையில்
உன்னால் எய்த முடிந்தது
மரணம் மட்டுமாயிற்று

தாயே
மனந்தாங்காச் சோகப் பாடலை
காற்றினில் எழுதியே மறைந்தனையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனதினிய மகவு மீதான
தீராத அன்பைக் கலந்து
உனதான எதிர்பார்ப்பின் பின்னான
ஏமாற்றத்தின் ஏக்கத்திற்றோய்ந்து
கடத்தப்பட்டுக் காணாமல் போன
எம்மவரின் சுயத்தை அவாவி

எமது
கபனிடப்பட்ட வாழ்வு மீது
மனந்தாங்கவொண்ணாச் சோகப் பாடலை
உந்தன் கடைசி மூச்சில் எழுதிச் சென்றனையே


உன் சாவின் மண் சாம்பல் மேடாயிற்று இப்போ
சாம்பலின் துகள்கள் ஒவ்வொன்றும்
எனதும் உனதுமான இயலாமையை
இயம்பி இயம்பி அழுதிற்று

ஹயாத்தும்மா உனது மௌத்து
எதனைத்தான் ஆயத்தமாக்கிற்று எம்மில்

2003 மே 15

(31.03.2001 அன்று மூதூரில் கடத்திச் செல்லப்பட்ட தன் மகனின் இழப்புத் தாழாமல் 15.04.2003 அன்று நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்ட தாயின் ஞாபகங்களுக்கு...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதிர்மீரா குளமும் கதியறியாக் கதை

என் நிலத்துண்டையும் நீயுரிய
நெடுங் காலமும்
நிர்வாணமாயிற்றென் நிராயுதம்

என் கதிர்மீரா குளத்தை
உன் அப்பனின் அப்பனின் அப்பன்
அபகரித்ததாய்
என் வாப்பாவின் வாப்பாவின் வாப்பா
சொல்லி மாண்ட கதை
இன்னுமென் காதுக்குள்
பழுக்கக் காய்ச்சிய கோலாயிறங்க
வதை படுகிறது வாழ்வு நீளவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளவும்
ஐயாயிரத்துச் சொச்ச நாட்களின் பின்
இந்நாள் என் நிலத்தையள்ளி
முகத்தில் ஒத்திச் சந்தோசிக்கிறது
பெருங் கணம் என் மனம்

பழைய குடிலின் முகட்டில் தொங்கிய
சிறு கண் வலையை மீட்டு
என் நந்தியுள் வீசியபடி
நினைவுள் மீள்கின்றன
பிறை படர்ந்த ராத்திரிகள்

என்னில் சிலர்
எஞ்சி நின்ற
தேக்கும் மா பாலா வேம்பும்
விளைந்த மண்ணின் வேரறுத்து
தமக்குள் எல்லைச் சண்டையும் நிகழ்த்தி
எல்லாம் விற்றுத் தீர்ப்பர்
மண் மீளும் உரிமையென

அலை கவ்வும்
முல்லையின் முஸ்லிம் நிலம்
சில இலட்சங்களுக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் முகவரி தொலைக்க
காலற்று அந்தரத்தில் தொங்கும்
நெடுங்காலம் என் சந்ததி யுகம்

உன் பேரனின் பேரனின் பேரனால்
நீராவியும் பீலிக்கரையும்
தண்ணி முறிப்பும்
தம் வசமிழந்து போகும் கதை
என் பேரனின் பேரனின் பேரன்
சொல்லிச் சொல்லி மாளுவான் வருங்காலம்

கதிர்மீரா குளமும் கதியறியாக் கதை
காற்றிலலையும் அப்போதும்

2003 ஒக்டோபர 27

(கதிர்மீரா குளம் – வடக்கில் முஸ்லிம்களின் பூர்வீகப் பிரதேசம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இழப்பின் மீதான பாடல்

மின்னிப் புதர் கவ்வ
நீராவியூற்றுத் தூர்ந்து போயிற்று

நீந்தி விளையாடிய விராலும் கச்சலும்
வாழ்விழந்த தவிப்பில் மூழ்கின

எனதும் நண்பனதும்
சிறு சோடிப் பாதங்களில்
சேறள்ளிப் பூசிய
ஒற்றையடி வழிப்பாடும் சிதைந்து அழிந்திற்று

என்றோ முடமான
நீராவி வித்தனின் ஒற்றைப் பனையிலுறையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டை கழன்ற சிட்டுக் குருவியது கீதம்
காற்றில் சோகம் நிறைத்த வண்ணம்
இன்னும் மீதமிருக்கிறது

மின்னித் தளிர் விலக்கி
நல்ல தண்ணீர் நான் குடிக்கும்
அச்சிறு ஊற்றுக் குழி
என் நெஞ்சுக்குள் தாகித்துக் கிடக்கிறது

2004 மார்ச் 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாகிப்பு

நீரற்ற வெறுங் கிணற்றுள்
வீழ்ந்து தவிக்கிறது பெருந் தாகம்
அது மீன் குஞ்சு

பொங்கிப் பிரவகிக்கும்
பெருங் கிணறென்ற அனுமானங்கள்
அனுபவத்திடை பொய்த்துப் போயின
வெறுந் தாகமாய் இருப்பிழந்து
துடிதுடித்துச் சாகிறது குஞ்சுமீன்

குஞ்சுமீன் பிடித்தேனும்
குறும்பசியாறலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நம்பிக்கையோடு இன்னும் காத்துக் கிடக்கிறது
நொண்டிக் கால்களும்
குருடு தட்டிய கண்களுமாய் சுற்றமும் அயல்

ஆத்மாவின் ஈரலிப்புக்காய்
மீளெழும் என் தாகிப்பில்
எவர் வந்து கலப்பரினி
நீளக் கனவுகளும் சிதைந்தாயிற்று


நீரற்ற வெறுங் கிணற்றுள்
நான் எங்ஙனம்
தாகந் தணித்தலியலும் கூறு மனமே

2004 ஏப்ரல் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முரண் வாழ்வு


10408

குளத்து மீனுக்கு
தூண்டிலும் வலையுமான
அடக்குமுறைக்குள் சிக்காது
கண்ணாடிப் பளிங்குத் தொட்டியில்
வாழும் விருப்பம்

தொட்டி மீனுக்கோ
இன்னது இன்னதென்று எழுதிய
செயற்கை இருப்பின்
சொகுசுச் சிறைக்குள்ளிருந்து விடுபட்டு
குளத்தில் நீந்தவே ஆசை

2004 ஜூன் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் வீட்டு மழை

வசீகரமானது
எனது சின்னக் காலத்து மழை
மேகம் மோதி முழங்க
கதவு தாழிட்டு
காது பொத்தி உள்ளிருப்போம்
கூரைத் தகரத்தில்
நாதமெழுதும் பெருமழையோய
மெல்லக் கதவு திறந்து
குளிர் போர்த்தி வெளியாவோம்
மரம் எழுதும்
இரண்டாம் மழைப் பாடலில்
உயிர் சிலிர்ப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமரம் சடைத்த நடு முற்றத்தில்
குமிழி குமிழியாய் மழைக் கவிதை வாசிப்போம்
பழைய வீட்டுக் கொப்பி
விதவிதமாய்க் கப்பலாகும்
என் கப்பல்கள் கரையேறுவதெப்படி
நான்கு குமர்களோடு உம்மா இருப்பாள்

2004 செப்டெம்பர் 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சபிக்கப்பட்ட தெரு

ஊரின் முகத்தில்
தூசியள்ளிப் பூசியபடி
உலாவுகிறது தெருக்காற்று

புள்ளடிகளைச் சுவாசிப்பதற்கென மட்டுமாய்
ஊருக்குள் நுழையும்
துர்க்காற்று திரும்பிய பிறகு
உயிர் உறிஞ்சப்படும் புழுவாய்க் கிடந்து துடிப்புறும்
உனது ஊர் பற்றி
யாரிடம் சொல்லியழல் இயலும் நீ

வாயிலும் மூக்கிலும்
கண்களிலும் காதுகளிலுமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தூசிகளையே காவியலையும் காற்றுத் தின்னிகள்
வாய் பிளக்கவும் கண்விழிக்கவும்
அதனதன் வழியிலிருந்து தூசுப் படலங்கள்
படர்வுறும்

இந்தத் தெருவை
நிறம் பூசிய புள்ளடிகளைக் கொண்டு நிரப்புவதாக
உறுதிமொழிகளும் உருக்குலைந்து
தூசாதல் கூடும்

இனி
கோலமிழக்கும்
உன் தெருவின் வரைபடம் குறித்து
யாரிடம் சொல்லியழல் இயலும்
நீ
தூசு படரும் உன் வீதியை
சபிப்பதைத் தவிர

2005 ஜனவரி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குரலின் பிரகடனம்

எனது குரலை
நீ
என்னவும் செய்தல் கூடும்

நார் நாராய்க் கிழித்து
காற்றைக் கடந்த வெளிக்கு வீசுவாய்
குத்திக் கூறிட்டு
உனக்கான மாலையாக்குவாய்
பிடித்து இழுத்து
எத்தரப்பும் தர மறுத்துச் சிறையிலடைப்பாய்
பிய்ப்பாய் பிசைவாய் உண்டும் திளைப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தனித்து நிறுத்தி
கல்லெறிந்து கொல்லவும் செய்வாய்

நீ எது செய்யினும்
அடித் தொண்டையும் தாண்டி
அடி மனசில் கிடந்து துடிக்கும்
அதன் உயிர்ப்பை
நீ எதுவும் செய்தல் இயலாதென அறியாய்

அடிவேர் நரம்பிருந்து
என் குரல் வலிகொள்ளும் நாளில்
உன் எல்லா வன்முறைகளும்
அதன்முன்
சடலமாய்க் கிடக்கும்

2005 மார்ச் 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துயர் மண்டியதும் காதல் விரிவதுமான கவிதைகள்

நீரடிச் சேற்று மண்ணாய்
துயர் மண்டிக் கிடக்கிறது வாழ்வு

ஒவ்வொரு பொழுதிலும் கால் வைக்கவும்
சேறப்பி சேற்றோடு புழு கவ்வி
ரணமாகிப் போகின்றன கணங்கள்

நம்பிக்கையற்றதான இருப்பின் மூச்சுகளே
காற்றை நிரப்பி
நாளை வரும் நாள்களிலும்
முள் ஏற்றுகிறதான ஏக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாக் காரியங்களும்
அர்த்தமற்றவையாயும்
திருப்தி தராதவையாயும் கழிகையில்
சீயென்று
என் மனசு துடிப்பது யாரறிவர்

ஆயினும்
ஆழத்துயர்ச் சேற்றின் வேரிலிருந்து
மெதுமெதுவாய் துளிர்க்கிறது
வாழ்வின் மீதான ஈரமான காதல் தாமரை

2005 ஏப்ரல் 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# எனது காகங்களில் உனது இறக்கைகள்

ஒலியும் வரியுமற்ற மொழி கொண்டு
நானெழுதும் கவிதை
மெல்லக் கரைதல் கூடும் உனக்குளினி

கரைந்தழிந்து
ஓர்
புதிய மொழி உனக்குள் எழுதல் கூடும்

செத்து வீழ்ந்து காகங்களாய்ப் போன
மௌனங்களின் குடலுருவிய
கழுகுகள் மீது அது
தீ நாக்கை நீட்டவும் கூடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கான விடியலைத் தட்டியெழுப்பாத
காகங்களின் உதடுகளில்
புதிய செட்டைகளைக் கட்டவும் கூடும்

ஒலியும் வரியுமற்ற மொழி கொண்டு
நானெழுதிய நீண்ட கவிதை
உனக்குள்ளும் எனக்குள்ளும் கரையக் கரைய...
செத்தே போயின
இலட்சத்துச் சொச்சக் காகங்கள்

இப்பவும்தான்
செத்து வீழ்ந்ததொன்று
அவன் வன்சொல் சுட்டு
என் சுவாசமும் என் கண்ணீரும் கரையக் கரைய...

உயிரேறிய மொழி கொண்ட
எனது புதிய காகங்களில்
உனது இறக்கைகள்
முளைவிடுதலும்
மேலெழுந்து பறத்தலும்
சாத்தியமாயிற்று

2005 ஜூன் 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10408



# ஒன்பது பிசாசுகளும் ஒரு ஸஹன் மண் சோறும்

ஒன்பது பிசாசுகளும் கை பிணைந்து
மண் வாரித் தின்றன
நேற்றுச் செத்த பெரும் பேய்
அதன் அப்பனின் மூச்சுக்காற்றைப் பிடுங்கியெடுத்து
மையத்தின் கைரேகையால் எல்லை வரைந்து
எமதின் நிலத்தை விழுங்கிய பின்தான்
கபுறுக்குள் போனதாய்
ஒன்பது பிசாசுகளும்
அதனதன் சிசுக்களுக்குச் சொல்லி மகிழ்ந்தன

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேகரிப்பு பகுதி
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கெங்கோ அலைந்தவை
எழுபத்துச் சொச்ச கொடுங்கை கொண்டு
எம் மண்ணைப் பிசைந்து விழுங்கின
எம் உணர்வுகளும் உயிருருக


மூத்த பிசாசும் மூச்சுத் திணறத் தின்றதில்
மூஞ்சியில்
அபகரிப்பின் சர்வ கொடூரமும் அப்பியது
எதுவுமறியாக் கிட்டடியில் போட்ட
குட்டிப் பிசாசுகளும்
பெரும் பேயின் வாரிசுகளாய் வாரிக் கொண்டதில்
எமது மனத்தூர்கள்
துயர் மண்டிப் போயின

நேற்றுச் செத்த பெரும் பேயின் சிபாரிசுகளோடு
சிறுசும் பெரிசுமான
அத்தனை பிசாசுகளும்
கபுறுக் குழியிலும் மண் அள்ளிப் புசிக்குமோ

2005 ஆகஸ்ட் 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லை முஸ்ரிபா



# மறுக்கப்பட்ட மொழியின் யாசகன்

எனக்கான சிந்தனை வெளி அறுந்து தொங்குகிறது
தொலைவில் இருப்பின் அர்த்தப்பாடும்
தொலைகிறது
எனது அடையாளமான உயிரின் மொழி
மறுக்கப்பட்ட சேதமொன்றில்
வேர் ஊடவென
அருக்கனையூற்றிக் கவிதை எழுதுவதற்கான
சிறகுகளை வளர்த்து வருகிறது
என் ஆத்மா

நான் எனக்கான அடையாளங்களைச் சிதைத்துவிட
சித்தம் கொள்ளேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உயிரிலான மொழி மறுக்கப்படுகையில்
அடையாளமாய்
முகமூடி மொழி அணியும் அவாவுறேன்

நான் எப்போதும் யாசித்துக் கொள்வேன்
எனது மொழியின் குரலெடுத்து
சுவாசித்துக் கொண்டேயிருப்பேன்
எனது மொழியின் சுகந்தம் அள்ளி

எனக்கான குரல்
நாளையும் நெருக்குதல் படுமாயின்
அடியுறங்கும் ஆன்மாவின் வீறாப்பில்
என் கவிதை உயிர்த்தெழலை
எவர் நசுக்குதல் கூடும்
மறுக்கப்பட்ட தேசத்தின்
மறுக்கவியலா மொழியின் உயிராய் விரிந்தெழுவேன்
அருக்கனையூற்றியெழுதிய கவிதை
சிறகிலெழுந்து பறத்தல் தொடங்கும்

2005 ஒக்டோபர் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல் தெப்பம்

இதயத்தைத் தோண்டியெடுத்து விட்டு
அதனிடத்தில்
ஏதோவொன்றைத் திணிக்கிறீர்கள்
எனதான இலக்குகளை வரையவும்
இலக்கு நோக்கிப் பறக்கவும் முடியாதபடி
இறக்கைகளைப் பறிக்கிறீர்கள்
உங்களது தூர நோக்கு
எங்கு என்னை நிறுத்துமென்று
கனவும் விதிக்கிறீர்கள்

நீங்கள்
புத்தகப் பொதிகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல் தெப்பமாய் சுமத்துகையில்
நான்
எங்ஙனம் மிதப்பதும் நீந்துவதும்
என் கரைகளை வரைவதும்

மூழ்கும் ஓடத்திலேறி
வரும் நூற்றாண்டுக் கனவு பயணிக்கிறது

2005 நவம்பர் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விசர் பிடித்தலையும் நீ

காற்றிலெழுதிய மென் குரலை
வௌவினாய்
உன் நச்சுப்பல் ஏற்றிய விசத்தில் வசமிழந்து
உயிர் துடித்துக் கிடந்தது
என் மனசின் குரல் பூனைக் குட்டியாய்
உன் ஊளை
மூளை நரம்பேறி
உணர்தலை வலித்திற்று

வைக்கோற்பட்டறை சொந்தங் கொள்பவன் நீ
முன்னங்கால்களை நீட்டியபடியும்
நிமிர்த்தவே ஒண்ணா வாலை முறுக்கிய படியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவல் கிடக்கிறாய்
கிடந்து உழக்குகிறாய்
உழக்கியுருவும் குலைக்கிறாய்
என் வருகை காணவும் உறுமுகிறாய்

நக்குத் தண்ணி குடிக்கும் நீ
காற்றிலும் நக்குகிறாய் என் மென் குரலில்

தேவதைகளுக்கு வாலாட்டுவதும்
சிம்மாசனத்துக்கு வால் பிடிப்பதுமான
உன் சேஷ்டைகளில் வேகிப் போயிற்று
ஊமைக் காற்று

காற்று வெளியில்
மோப்பம் பிடிப்பதாய் உன்
விசர்ப் புத்தியை என் மீது திணிக்கிறாய் இப்போது


நாக்குத் தொங்க
நக்குத் தண்ணி குடிக்கும் நீ
உன் வீணி ஊற்றுண்ட காற்று வெளி
நாறிக் கிடப்பதையும் அறியாய்

2006 பெப்ரவரி 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தீர்வு

நாற்காலியொன்றில்
நாலாவது கால் பற்றிய
பேச்சுவார்த்தை தொடங்கியதும்
முறிந்து போயின
முன்னம் இருந்த
மூன்று கால்களும்

2006 மார்ச் 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லை முஸ்ரிபா



# இருப்பின் அலைவு மீதான சொல்லாடலில் தோற்றுப்போன குரல்கள்

வேரோடு பிடுங்கி கையில் பற்றியவாறு அலைகின்றன
அந்தரத்தில் மரங்கள்
ஒட்ட ஒண்ணா மண் துகள்களில்
இருப்பின் மூச்சை எழுதிவிட்டு
உயிரற்றுப் போயிற்று பெரு விருட்ஷிப்பு
சோலையாய் சடைத்திருந்ததான
சீதளப் பக்குவமும் தொலைந்தது
பல்லாயிரத்துச் சொச்ச விசர்ப்பற்கள்
நீட்டியெழுந்த கொடு விலங்கு
சப்பத் தொடங்கவும்
வேர் பிடுங்கி மரங்கள் வெளியேறின
மேலால் படர்ந்த மேகமும்
துயரம் பாடி தூர விலகியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தை நாளும்
வெளியேற்றப்பட்டதான மரங்கள்
சருகாய் சுருண்டு கிடக்கும் வெளியில்
மூச்சடைத்து விழுந்தன
பல நூறாயிரத்துச் சொச்சமாய் மரங்கள்

இன்றை நாளும்
மரங்கள் பற்றியதான உரையாடலை
தொடங்கிற்று வெற்றுக் குரல்கள்


வாடிப்போகும் இலைகளுக்கு
பொலிசடித்து புதுப்பிப்போம்
என்றது ஒரு குரல்
கிளைகளை வெட்டி தழைத்தல் செய்வோம்
என்றது மற்றொரு குரல்
நிற்பாட்டி நீரும் பருக்கி நிம்மதி சேர்ப்போம்
என்றது இன்னொரு குரல்
பசளையிட்டு பசுமை கொணர்வோம்
என்றது மறுகுரல்

குரல்களின் உரையாடல் தொடர்ந்தது
மரங்கள் முனகின
இருப்பின் அலைவு மீது
சுட்டிச் சொல்ல வார்த்தைகளற்று
காற்றும் விலகியது

வேர் பற்றி உரையாட
எவர் உளார் எம் வசம்

2006 ஆகஸ்ட் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனியப்பிள்ளையின் பேரனின் பேரனுக்கு

மண்ணின் நிறமற்று உயிர் கரைந்து அலைகையில்
வேரற்று வெறும் வெளியில் அந்தரிக்கும்
வாழ்தல் பற்றி சிந்திப்பதுண்டா நீ
பதினாறாம் ஐப்பசியும் பசித்திருக்கிறாய்
பிஞ்சு மண் பிடிச்சோறற்றும் நீராவி பாலின்றியும்
பலிதமாகுமா
ஜீவித குதூகலிப்பின் அவாவுகை உனக்குள்
எவரெவரோ கூறக்கேட்டிருத்தல் கூடும்
புராணக் கதை போல தாயகப் பெருமையென பூரித்து
வளர்பிறை வரவு காத்திருக்கும்
முகாமின் கிடுகு பொத்தல்களும் உக்கிற்று
உன் ஊருக்கேற்ற ராசா வந்தேகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனதின் பிறை மீட்டுத்தரல் கூடுமென
நீளக் கனவுதலும் தீய்ந்திற்று நெடுநாளாய்
வாப்பாவின் வாப்பாவின்
வாப்பாவின் வாப்பாவினுடையதுமான
வேர் நீண்ட காலடி மண்
அநாதரித்து திரிதல் குறித்து உனக்குள் உயிர்
சிலிர்த்திற்றா
எனின்
உன் பேனா அலகு தீட்டு
எதுவுமற்றவர்களின் குரலாய் எங்கும் பரவிக் கூவு
அடிவேரில் உறைந்ததான உயிர்மை
எங்ஙனம் விடுபடும் அவ்வழகு மண் விட்டு

2006 ஒக்டோபர் 20

(ஜனியப்பிள்ளை: முல்லைத்தீவின் பூர்வீகக் குடியாள்
ஒருவரைக் குறிக்கும் பெயர்
நீராவி: முல்லைத்தீவு தண்ணீரூற்றிலுள்ள நீரோடை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனவில் குந்தியிருந்து கதறியழுத கவிதை

10408

கனவிலும் அலைகிறேன்
அடைய முடியா வாழ்வின் ருசிப்பை
பருகக் கிடைக்காத் தாகிப்பில்
அலைந்துழல்கை தொடர்ந்திற்று

கனவினோரத்தில் குந்தியிருந்து கதறியழும்
வினைஞனைக் காணுகிறேன்
அவாக்கள் சிதறிவிழ அவன் முன்னால்
வறண்டு கிடக்கிறது நந்திக் கடல்
தோளில் போட்ட அத்தாங்கைத் தேடுகிறான்
முகத்தில் நினைவுதலை அறைகிறது நந்திக் காற்று
காற்றில் அள்ளுண்டு என் கனவுகளும் அலைகிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம்பினோரத்தில் குந்தியிருந்து கதறியழும்
வினைஞனைக் காணுகிறேன்
ஆசைகள் நொருங்க அவன் முன்னால்
பரந்து கிடக்கிறது
தண்ணிமுறிப்பு வயல்வெளி காடு முற்றி
கலப்பையைத் தோளிலிருந்து இறக்குகிறான்
ஏர் பூட்டிய எருதுகள் காணாமல் போயின
முந்தை நாள் சுவடுகளும் தேய்ந்தழிந்திற்று

அவனது உழைப்பு நிலத்தை
துவக்கேந்திகள் உரித்துக் கொண்டிருக்கின்றனர்
வலியில் துடிக்கிறது வேர்வை நிலம்
அடைய முடியா வாழ்வின் ருசிப்பை
பருகும் தாகிப்புடன்
அவன் மனதில் படிந்த துயர்தலின் நெடி
எனக்குள் நுழைய கனவு பெருக்கிறது

2006 ஒக்டோபர் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுயம் அழியும் இருப்பு மீதான சோகப் பாடல்

காணாமல் போய்க் கன காலமாயிற்று
மாடு
தேடிப்போன பழைய நாட்குறிப்பில்
காலடித்தடமும் அழிந்திற்று

பூக்குளம் வற்றி
புற்றரையும் வடிவிழந்திற்று
கால்களில் வலியேற வலியேற
அலையும் பொழுதுகளில்
மாடு கறந்த பாலினதும்
அது பீச்சிய சாணத்தினதும் வாசம் மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றிலும்
என் கவிதைகளிலுமாக எஞ்சிற்று

காணாமல் போய்க் கனகாலமான
மாட்டினது கதறலொலி
எங்கிருந்தோ கேட்பதாக
கனவுகளில் நெடுகவுமாகக் கண்டாயிற்று

காத்திருந்தும் காலம் கனக்கவாயிற்று

தேடிப்போன வெறும் வெளியிடத்தில்
இப்போது
மாடுகளின் காலடிகள் நிரைகின்றன
குளமும் பூக்களால் குதூகலிக்க
புல்வெளியும் புதுசாய் வசந்தமிசைக்கிறது

காணாமல் போன மாடு மட்டும்
இன்னும் வந்தடைவதாயில்லை
மீளவும் தேடுவதாயுமில்லை


பழகிப்போயிற்று
இழப்புகளும் அது தரும் இடருமான
இருப்பு

2006 நவம்பர் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தர்க்கிப்பு

சூரியனும் சந்திரனும்
கட்டிப்பிடித்து உருண்டன
நான்தான் பகலை அழிப்பேன்
என்றது சந்திரன்
இல்லை
நான்தான் இரவை அழிப்பேன்
என்றது சூரியன்
தர்க்கிப்பு உக்கிரமானது
இன்னும் தான்
இருளில் உறைந்து கிடக்கிறது
பூமி

2006 நவம்பர் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லையற்ற வெளியில் கவிதைக்குக் காத்திருத்தல்


சீதளித்து குதூகலிக்கிறது குறும் நேர மனசு
உனதான குலாவுகையின் ரீங்காரிப்பில்
இதழ் இமயமானது ஆயுசு
ஆயுசு பரியந்தம்
சிறகசைப்பினது மெல்லிய காற்றதிர்வில்
தேனென பிரவாகிக்கிற ஆவல் அதி மீதம்
மீதம் வையாதே உறிஞ்சிடு
நீ
வளைய வரும் நினைவுள் தோய்ந்தெழுதலும்
பனி துளிர்வுறும் ஈரலித்தலில் இதயம் கசிவதுமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதி வசந்தமாயிற்று சிறு பொழுதும்
பொழுதும் விரியும் செடியினது ஆழ் விதையிருப்பின்
மீது
சிறுக சிறுக கனவு சேகரத்தில்
இனி வரும் கணமும் மகிழ் காண
ஆசிக்கிறதென் நேச மனசு
நீ
மறுபடி ஒரு தயனம் மடிக்குள் வந்தமர்
மகரந்தம் முளைகட்டிக் காத்திருக்கு
மென் மனசு வரவு பாடி

2007 பெப்ரவரி 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிரிழை மண் மீதான பாடல்

களி மண் பூசித் தீத்தின திண்ணை
உம்மம்மாவின் உயிரிழை உணர் கோடுகளின்
வரைபடத்தினது
ஈரம் உலரா முன்னம்
என் சுட்டு விரலில் வழிந்த உயிரெழுத்தின் முதலி
நினைவுள் செதுக்கலென
மீள மீள என்னை மீளளிக்கும்

ஐயாயிரத்து சொச்ச அவலித்த நாள்களின் கழிதலில்
காணப் பெருங் கனாவுடன்
தொடங்கிற்று பயணிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தைத் திண்ணையினது சிதைவிருந்தது வீடு இல்லை
வீட்டினது ஆதி நிலமும் வசமில்லை
சகலதுமான வேலி தகர்த்தி உள் போனது மனது

ஆயிரம் கவிதைகளை தனக்குள் செதுக்கிய ஆத்மா
முதல் விரல் அட்சரத்தில் வீழ்ந்து உயிர் சிலிர்த்திற்று

முகாமின் இருளில் மௌத்தாகிப்போன
உம்மம்மாவின் மண்ணிழை ரேகைகள்
கபுறுக்குள்ளும் உயிர் துடித்திருக்குமே

2007 மார்ச் 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மரத்தின் கதை

மரம் தோப்பாகுமெனக் காத்திருந்தோம்
கோடரிப் பிடிகள் தயாராயின
இலையுதிர் காலமும் நீண்டது
விழுதுகள் சிதறின
கிளைகள் வெறியேறிப் போயின
குருவிகளும் கூடு சுமந்து பறந்தன
அடிமரமாய் நிற்கிறது
தோப்பின் கனவுகள் சிதைய
மரங்கொத்திகள் இசை மீட்டுகின்றன

2007 மே 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆக்கிரமிப்பின் நெடுங் கதை

துயின்றெழுந்தபோது
என் வீட்டில்
முஸல்லா விரித்த இடத்தில்
கையில் கீதையாய் பைபிளுடன் கிருஷ்ணர் இருந்தார்
அதிர்ச்சியில் கண்களை இறுக மூடினேன்
பார்வைக்கு வெளியே
ஏதோ அகோரம் நிகழ்ந்திற்று
மறுபடியும் விழித்தபோது
கிருஷ்ணர் இருந்த என் வீட்டில்
அரச மரம் கிளைத்தெழ
புத்தபகவான் பரிநிர்வாணமாயிருந்தார்
நான் நிர்வாணமேக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கண்களைப் பொத்திக் குப்புற விழுகிறேன்
என் பிள்ளையின் பிள்ளையும்
பிள்ளையின் பிள்ளையும்
நிஷ்டையிலிருந்து எழுகிறபோது
அதே என் வீட்டில்
மீண்டும் யேசுநாதர் வீற்றிருப்பார்
சிலுவையில் அறையவும்
பைபிளில் புதைக்கவும்
கபனிடப்பட்ட தேசமாய்க் கிடக்கும்
என் உம்மத் மீது துளிர்த்து
மீளெழும் சிறுபுல்

2007 நவம்பர் 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனமுடைந்த முட்டை

முட்டையுடைந்து விடக்கூடாதென்பதில்
சொற்களைக் கவனமாகவே
அடுக்குகிறேன்
சொல்லும் சொல்லில் கிடக்கும் அட்சரமும்
தேனில் குழைந்தும்
பாலில் தோய்ந்தும்
ஈரலிப்புடன்தான் வியாபிக்கின்றன
பொழுதெல்லாம்
எனினும் உன்னிடமுள்ள சொற்கள்
தேளாயும் அரவமாயும் எழுந்தாடுகையில்
என் முட்டை உடைந்து நஞ்சேறுகிறது
தேனிலும் பாலிலும் சொற்களையடைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பரம்பரையியல்பு
நாணமேறி மௌனிக்கிறது
அத்தகைய மௌனத் தருணங்களிலும்
நீ
ஆயிரம் முட்டைகளை உடைத்தெறிகிறாய்
முட்டைக் கூடைகளைச் சுமந்து செல்பவர்களே
ஜாக்கிரதையாக நடவுங்கள்
அவன்
என்னை
வார்த்தைகளற்ற சடமாய்க் கருதுகையில்
என் மென்பஞ்சுச் சொற்களை இழந்து விடுகிறேன்
அறியட்டும் அவன்
என்னிடமும் வன் சொற்களுண்டு
எறிந்தால் பொசுங்கிடுவான்
எனினும் எறிவதில்லை
ஏனெனில் நான் மனிதன் என்பதனால்

20007 ஜுன் 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுதந்திரம்

என் மகள் படமொன்றை வரைகிறாள்
அது சூரியனாய் ஒளிர வேண்டுமென்கிறான்
மகன்
சந்திரனாய் குளிர வேண்டுமென்கிறாள்
மனைவி
நட்சத்திரங்களாக விரவ வேண்டுமென்கிறார்
உம்மா
மேகமாகத் திரள வேண்டுமென்கிறார்
வாப்பா
வானமாய் விரிய வேண்டுமென்கிறேன்
நான்
அது என் விருப்பம் என்றது
தூரிகை

2007 ஜூன் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குரலற்ற பறவைகளின் விடுதலைப் பாடல்


பூர்வீகமும் இடிபாடாயான சுவடுகளில்
தொப்புள் கொடியும் அறா வண்ணம்
தொன்ம வெளியில் சிறுகக் கரைந்து
கரும் புள்ளியாய் படிகிறது மனசு
மனசு சிறு பறவை
உயிர்மை சொட்டும் இருப்பை மீட்க சிறகை தேடுகிறது
வேரிழந்த கொப்புகளில் உறங்கும்
குரலற்ற பறவைகளின் கேவலைக் காவிச் செல்ல
சிறகுடையவனைக் கூவிற்று காலம்
பாங்கொலியும் கலைந்த
பள்ளிவாசல்களின் சிதைந்த மினாராக்களில் வீழ்ந்து
ஸுஜூதிக்கிறது எல்லா வக்தும் நினைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவுகொள்ளப்பட்ட குடிலினடியில்
சிறகடிக்கிறது சேய்க்குஞ்செனப் பால்யம்
சிறு பாதம் பதித்த முதல் மண்
எமதுமாய் உணர்வில் உறைந்திற்று வேர் நீள்கவென
பெயரறியாச் செடியொன்றும் வளர்ந்து
முள்நீட்டி பரவத் தொடங்கிற்று
பூர்வீகமும் இடிபாடாயான சுவடுகளில்
இன்னமும் உயிரொட்டி நிற்கும் மென் மனசு
விடுதலைப் பாடலை இசைத்தபடி
குரலற்ற பறவைக் குழாத்தின் கனவைச் சுமந்து செல்ல
சிறகுடையாரை அவாவுகிறது

2007 ஒக்டோபர் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லாத் துயரும் கொண்டலையும் மௌனம்


துயருள் மீளும் வாழ்தல் குறித்து
பேசுதல் தொடங்கா மௌனத் தருணங்களிலும்
ஈரமற்றுப் போகும் உயிர்ப்பை
கொஞ்சம் கனவு கொண்டாயினும் நிரப்பிக்கொள்
குடில்காவி அலைவுறும்
அவலித்த வட்சரங்களின் முடிவுறா நீட்சியில்
களித்திருப்பு கைகூடுதல் எங்ஙனம் சொல்
எல்லாத் துயரும் கொண்டலையும்
மௌன வெளியில்
எத்தகைய இலட்சியங்களைச் செதுக்கிற்று
துவம்சம் செய்யப்பட்ட உன் வம்சம்
வேரும் இற்றுப் போயிற்றதான பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகளினால் அளவிடப்படும்
இற்றை வாழ்வு
நிறங்களாலற்றது குறித்தாவது
சிந்தித்ததுண்டா
மனசே நீ
ஒரு மெல்லிய உறுதிப்பாட்டை
நெஞ்சுள் வரைதல் வேண்டுமென்றாவது
இரண்டாம் காற்று வெளி விரிகையில்
உன்னிடமும் கொஞ்சம் சிறகுகள் இருக்குமென்றாவது

2007 ஒக்டோபர் 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பூமியின் துறவு

கண்ணகியும் மாதவியும்
துவக்கோடு அலைந்தார்கள்
கோவலனைக் கண்டதும்
முதலில் சுட்டாள்
கண்ணகி தன்னைத்தானே
சற்றைக்குள் உறைந்தவள்
அதிர்ந்து போய் மீளவும் சுட்டாள்
மாதவி கோவலனை
எஞ்சிய வாழ்வில்
துறவு பூண்டது
பூமி

2007 டிசம்பர் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவாவுறும் நிலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் எதிர்ப்பிசைக் குருவி


முற்றத்து நிழல்வாகைச் சிறு குருவி
இசை பாடத் தொடங்குகிறது
துப்பாக்கியோடும் ரத்தவாடையோடும்
சூரியன் எழும் காலைப் பொழுதிலும்
குருவி இசைக்கிறது
இன பேதத்திலும் மொழி பேதத்திலும் ஊறி
நிலவு வழிகையில்
குருவியின் இசை காது கிழிக்கிறது
நட்சத்திரங்கள் சிலது உதிரவும்
வானவில் வர்ணங்களைத் தொலைத்து நிற்கவும்
குருவி இசைத்துக் கொண்டேயிருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேகந் திரண்டு மழை பெய்வதாகச் சொல்லி
வெள்ளத்தில் அள்ளிச் செல்கையில்
குருவி தனித்திருந்து குரல் நீட்டுகிறது
அதிகார சிம்மம் கர்ஜித்தலிலும்
அடக்குதலுக்குள் குஞ்சுகள்
மாண்டுபோதலிலும்
குருவி குரல் கிழிந்து சாகாது
ஏனெனில்
நான் குருவி
எதிர்ப்பிசைக் குருவி

2008 ஏப்ரல் 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலனற்று சமைந்த கல்லாய் கிடத்தல்


அதனது சொற்களும் அகோரம்
சப்பிப் பீச்சிய
கழிவின் நாற்றம் தாங்கவொண்ணாது
என் செவிகளும் மழுங்கின
அவிந்த விழிகளால் தீட்சண்யம் கூர்கையில்
அதனது இலட்சியங்கள் பற்றியதான சேதி
வெறுந்தூசாய்ப் படர்வுறும்
அது அதனது அதிகார வெளியை வரைகிறது
அதன் கீழ்
புலனற்றுச் சமைந்த கல்லாய்க் கிடத்தல்
சாத்தியமற்றது எனக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன் சொல்லுமற்றதான அதனது குரல்குத்தி
வடுவுற்ற மென் நெஞ்சு
பொத்தியே வைத்துள்ளேன் குறுங்கணம்
வறண்ட சிறு பயிர்களையும் கவ்வி
தன் உருப்பெருத்தலில் அக்கறைப்படுகையில்
கடியுண்ட பயிர்களின் வாட்ட முகத்தை
எங்ஙனம் வரையாது தவறும்
என் மனம்
அசுத்தங்களையே வாரியள்ளி
அகமும் முகமும் பூசி
வர்ணக் கனவு காட்டும்
அதனது அதிகார வெளியில் உருகிப் போகாத
புதிய இறக்கைகள் முளைத்தெழல் வேண்டுமினி

2008 ஜூன் 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆயிரத்தோராவது இறக்கையில் உயிர்க்கும் விடுதலையின் பாடல்

சொற்கள் குற்றுயிர்த்த வறள் வெளியில்
என் விடுதலையின் பாடல் அலைகிறது
கடலை முழுதாய்ப் பருகிய
சிறு குருவியின் திமிரோடு
பழைய முகாமின் குடிலில் குந்தி குரல் மீட்டியது
சொற்கள் இளந்தாரித்துத் திரிந்த
நம்பிக்கைகளுடன் கைகோர்த்துப் பறந்தது முந்தைநாள்

சொற்கள் குற்றுயிர்த்த வறள் வெளியில்
வீடுகள் பொரித்த குஞ்சின் முற்றத்தில்
வேரிட்டுக் கூவியது பாடல்
தன் பேரனின் பேரனுக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடொன்று பொரித்து விட்டதாக
முந்தைநாள் முகாமில் முடங்கிய
கிழட்டுக் குஞ்சு சொல்லிப் பிரவாகிக்க
தலைகுனிந்து முறிந்து வீழ்ந்தது பாடல் விருட்ஷம்
மண்ணிண் தொப்புள் கொடியுமறுத்து
புதிதாய் வேரொட்டிக் கிளைத்தாய்
நிமிர்ந்த செடிகளிடம்
வேர் நீண்ட காலடியைத் தேடியதில்
தோற்றுப்போனது என் விடுதலையின் பாடல்

காற்றைச் சபித்தபடி காதைப் பொத்தி
முகங்குப்புறக் கிடக்கிறது பரம்பரைவெளி
ஆயிரம் இறக்கைகளுடன் தாண்டிப் பறக்கின்ற
என் விடுதலையின் புறா
பிஞ்சுக்கால் முளைத்த முற்றத்து மண் பிசைந்து
வீடு கட்டி மகிழ்வில் உறைகிறது
பல்லாயிரம் தடவையென
முகங்குப்புறக் கிடக்கும் பரம்பரை வெளியில்
மறுபடியும் சொற்கள் மரணித்துப்போயின

2008 ஜூன் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலவு துளிர்த்து அமாவாசை கருகி


நிலவு துளிர்த்து மடியில் கிடக்கிறது
வதனம் அள்ளிப் பருகி சந்தோசிக்கிறது
மனசு
நெடும் பொழுதாய் நெஞ்சும் குளிர்த்திக்க
குதூகலம் காட்டிக் குழைவாய்
விழிநிறைய பூவெழுதும் மழலை
நீ
நீயே
என்னைத் தாலாட்டும் ஊஞ்சலாயினாய்
மெல்லக் கண்மூடி அயரும் கணங்களில்
என் ஆன்மாவுள் நுழைந்து
மெல்லென வருடி
புதுக் கீதமும் இசைக்கிறாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழலை தேன் சொல் தொட்டுத் தீட்டி
நீ
நிலவாய் துளிர்க்க
என் வானம் குளிர்ந்து போகிறது
நீ
மெல்ல இருட்ட
என் ஆகாயம் கருகிப் போகிறது
செல்லமே
நீ காலுதைக்கவும் மென்பூச் சிரிப்புதிர்க்கவுமான
வினாடிகளில்
மனசு மீளவும்
எல்லையில்லாப் பெரு வெளியாய் விரிகிறது
பூவே
நீ
என்னை எழுதும் போதெல்லாம்
வாசமுறுகிறேன்
நீ
என்னை வாசிக்கும் போதெல்லாம்
கவிதையாகிறேன்
வா
நிலவு பொறித்த பாடலொன்றை
பாடிக் கொண்டேயிரு
என் அமாவாசைகள் கருக

2008 ஜூன் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பின்னாலிருப்பவை பிசாசுகள் பற்றியவை

உக்கின வாள்கள் பொருதல் தொடங்கின
வாளேந்திய புயங்களில் கொதிப்பேற்ற
நெஞ்சுக்குள் நீலம் படர்ந்தன
உனதும் எனதும் வாள்களுக்குப் பின்னால்
உற்று நோக்கல் தவறியே தவறிழைத்தோம்
உனது முகமோ எனது மனமோ இல்லவேயில்லை
இல்லையென்பது தெளிந்த பிறகும்
உக்கின
உனது வாளும் எனது வாளும்
பொருதல் தொடர்ந்தன
வாள்கள் விதையாத முடிவிலி நாட்களில்
நமதான உள்ளங்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதான ரேகைகள் படர்ந்தன
அன்பால் சிலிர்த்தே வாழ்தல் கலந்தோம்
உனது பிரேதத்தை நானும்
எனது மையித்தை நீயுமாய் சுமந்து கொண்டோம்
ஒரே குழியில் புதையவுமானோம்
சுதந்திரத்தின் நாமமோதி
தூய வாக்குகளே வேட்டுக்களாயின
இருள்மை கவ்விய கரும் பொழுதொன்றில்
எங்கள் ஆத்மாக்களை கழுகுகள் சுமந்து பறந்தன
அதிகார வெளி
பிடரி சிலிர்த்து அடர்ந்திற்று
புரவியின் கால்கள் கீழ் நசுங்குண்டோம்
மையித்தாய் நானும் பிரேதமாய் நீயுமாய்
ஊரின் எல்லையில் உதறி வீசப்பட்டோம்
உதறிய கைகளில் நிறம் மாறாத கொடூரத்துடன்
பிசாசுகள் வெளிப்படத் தொடங்கின

2008 ஆகஸ்ட் 09

(கிழக்கு மாகாண சபைத் தேர்தல் காலத்தில் தமிழ் முஸ்லிம் இன முறுகலில் உயிர்நீத்தோர் நினைவுகளுக்காக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வீடு நீக்கப்பட்டவனின் விடுதலைப் பாடல்கள்

வேர் பிடுங்கப்பட்ட ஊர்களில்
ஆதிச் சொற்களால் கவிதை மூட்டியவனில்
விடுதலையின் அவாவுகை மொழி உறைவதேயில்லை
உயிரின் உணர்வில் உள்ளோடும் வீரியத்தின்
இரத்த கீதமாய் அது கிளர்வுற்றுப் படரும்

வீடு நீக்கப்பட்ட விடுதலையின் பாடகனே
அலைந்துழல்வின் நீட்சியில்
சிறகற்ற பறவையாய்
வானம் முழுவதும் இறக்கைகள் வரைந்தாய்
நீ
எழுதிய பாடல்கள்
அழிக்கப்பட்ட கிராமங்களின் விதைகளாயின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ
மூட்டிய தீயில்
கலீலியின் பறவைகள் உயிர்க்கின்றன


வீடு நீக்கப்பட்ட விடுதலையின் பாடகனே
பிர்வாவின் வயல் வெளிகளில்
உன் இரத்தம் தோய்ந்த கவிதைகள் விதைவுறும்
உன் கிராமத்து மல்பெரி மரத்தில்
உணர்வுகள் சடைக்க மீண்டும் எழுந்து பாடுவாய்

விடுதலையின் சொற்கள் தேய்வதேயில்லை
ஹைஃபாவின் வேர் நீண்ட காலடிகளில்
உன் கவிதைகள் ஊற்றெடுக்கும்
கலீலியின் காற்று வெளியில்
உன் மூச்சு சுதந்திரம் வாசிக்கும்

உன் சொற்களில் ஏறிப் பறக்க
ஆயிரம் ஆயிரம் வண்ணத்துப் பூச்சிகள்
காத்துக் கிடக்கும்
நீ
நாளை கிளைக்கும் ஒலிவம் தோப்பில்
பசுமை பூக்க சிலிர்த்தெழுவாய்
விடுதலையின் அவாவுகைமொழி உறைவதில்லை
எனது மொழி உனக்கான
விடுதலையின் பிரார்த்தனையில்
உறைந்து போயிற்று

2008 ஆகஸ்ட் 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பறவையின் அவாவுதல்

முரணற்ற இணக்கமான தருணமொன்றில்
என் பறப்பு நிகழ்கிறது
சுற்றிலுமாய் சாந்தம் கவியும் குரல்களின்
அரவணைப்பில் தங்கிவிடுகிற மனசு
நித்தியமாய் ருசிக்கிறது ஜீவிதப் பிடிப்பை
சலனமெதுவுமற்றனவாய் முரண்பாடற்ற முகங்கள்
எங்கும் பிரகாசிக்க
அவற்றிலிடையிலான அவாவுகையில்
சுகந்திக்கிறது புன்னகை வெளி நெடுகிலுமாய்

முரணற்ற இணக்கமான தருணத்தின் மீது
ஒளிபரவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


என் பறப்பு தொடர்கிறது
மிக அபூர்வமான காற்று வெளியெழுந்து
மெதுமெதுவாய் விரவ
உள் நுழைகிறேன்
வாழ்வின் மீதான பெரு விருப்பை
அள்ளிப் பருகிச் சந்தோஷிக்கவென்று
காற்றைத் தடவி இறக்கைகள்
மென் பஞ்சாய் விரிகின்றன
இறக்கைகளிலிருந்து உதிர்கின்றன
வெள்ளிநிறப் பூக்கள்

பூக்கள்
கொண்டுண்ட மென்தரையில்
புதிதாய் மனசு முளைத்து ஆத்மாக்கள்
உயிர்த் தெழுவதைக் காண்கின்றேன்

முரணற்ற இணக்கமான தருணமொன்றில்
என் பறப்பு மீள்கையில்
வேர் நீட்டிய காலடியில் தங்கிவிட
அவாவுகிறது என் மனசும்

2008 செப்டெம்பர் 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புராதன அமைதியின் காலைக்குத் திரும்புதல்

காலடியில் அமைதியைப் புதைத்து விட்டு
மேலெழுந்து நடக்கிறது காலம்
காலத்தின் தூசு அடர்ந்து
நிறமற்றுப் போகிறது தின வாழ்வு
நிம்மதியைத் தொலைக்கும் கொடூரத்துடன் தான்
விடிகின்றன ஒவ்வொரு காலையும்
ஒவ்வொரு விதமாய்
ஒரு குருவியின் மரணச் செய்தியுடனோ
சூரியனின் சிதைவுடனோ

ஒரு கணம்
புராதன அமைதியின் மெலிதான பூவொன்று
சுதந்திரித்துப் பறக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வண்ணத்துப்பூச்சி சிறகுகளுடன்
என் மனசில்
தனிந்திருந்தபடி குதூகலிக்கிறது
புராதன அதிகாலையின் அமைதியை

அற்றுப் போய்விட்டதே
அன்பு கலந்தொரு அழகிய விடியல்
வயல் வெளியின் குளிர் காற்றாய்
உயிரை வருடி வசந்திக்கும்
காலைப் பொழுதின் வரைபடத்தை வரைகிறது
வண்ணத்துப்பூச்சிச் சிறகுகளாய் பூ
அமைதி
நிரந்தரமற்றுப் போகையில்
புராதன அதிகாலையிலேயே தங்கிவிட
சித்தம் கொள்கின்றன
என் மனசும் பூவும்
வண்ணத்துப்பூச்சிச் சிறகுகளும்

நிகழ்காலச் சூரியனைச் சபித்தபடி
காலடியில் அமைதியை நசுக்கிவிட்டு
இரத்தச் சிவப்பாய் உயிர்க் காவுதலில்
விடிந்து தொலைகின்றன ஆயிரம் இரவுகள்

2008 ஒக்டோபர் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீடுடையானின் கதை


காலடியிலும் கமக்கட்டு இடுக்கிலும்
தலையிலுமாய் வீடுகள் குவிந்து விட்டன
விளையாட்டுப் பிள்ளைகள் போல
நீ
குதூகலிக்கிறாய்
ஒவ்வொரு வீட்டுக்கும்
புதுமாதிரியாய் அலங்கரிப்புச் செய்கிறாய்
வீடுகளின் புதுமை கண்டு
பெருமிதப்படுகிறது உன் பரம்பரை
தமது இருப்பையும் அவற்றுள் திணித்து விட்டு
நிம்மதியடையலாம்
இரட்டிப்பு மகிழ்வில் நீயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளைச் சுமந்து செல்பவனே
உனக்கேயுரித்தான உண்மையான வீடு
அதோ
இடிபாட்டின் இடை நசுங்கி
பூர்வீக வேரிலிருந்தும் கனன்று விழாதபடி
தன் இருப்பை அவாவிக் கிடக்கிறது
காலடியிலும் கமக்கட்டு இடுக்கிலுமான
வீடுகள் சிதறிவிழ
உண்மை வீட்டைத் தேடிச் செல்கிறது
ஒற்றைக் காலடி

2008 ஒக்டோபர் 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஒலிவம் சிறகுகள்


இருளின் விசர்ப்பற்கள்
காஸாவின் கடைசிக் கதிர்களையும் கவ்வின
ராத்திரியின் முகத்தில்
இளம் சொட்டுப் பூக்கள் ஒவ்வொன்றாய் உதிர
லைலா
அதனிடை எதனைத் தேடுகிறாய் நீ
உனது ஆதிச் சொற்களும்
விடுதலையின் குரலை வரைந்தபடி மீளவும் நீள
ஒவ்வொரு விடிபொழுதும்
அல்லாஹ்வின் பெயர் சொல்லியெழும் குத்ஸின் வாசலில்
வெடிகளாய் குரைக்கும் யூதத்தின் வேரறுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நீயும் கிளர்ந்தாய்
லைலா
நாளையும் இளம் சிவப்பு பூக்கள் உதிரல்கூடும்
நீயும் இரத்தம் தோய்ந்த வெள்ளாடையில்
தூக்கிச் செல்லப்படலாமெனின்
உன் உணர்வுகளை
எதிரி எங்ஙனம் கபனிடல் கூடும்
ஆதிச் சொற்களில் துளிர்க்கும்
அந்தமற்ற விடுதலையின் கீதத்தை இசைத்தபடி
எனதும் உனதுமான பாட்டனின் பாட்டனின் வன் நிலம்
அடிவேர் வரை மீளுதல் வேண்டும்
விடுதலையின் சொற்கள் தேய்வதேயில்லை
உன் வயதொத்த தோழியர் வேர்களைத் தேடுவர்
இருளின் ஆக்கிரமிப்பின் மேல்
நாளைக்கான விடுதலையைச் செதுக்க
லைலா
வசமிழந்து போகாத
உன் ஒலிவம் தோப்பிலும் ஸைத்தூன் வயல்களிலும்
சிறகு சிலிர்க்கப் பறப்பாய்

2008 டிசம்பர் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விடுதலை

சிறு புல்லும் உயிர்ப்பற்ற
பாழ்வனத்தில்
சிட்டுக்குருவி
துர்ப்பாடலை இசைத்தபடி மீண்டும் அலைகிறது
கனவில் ஒரு பிடியள்ளி

2008 டிசம்பர் 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைக்கு மேல் வன்முறை

அகோரப் பற்களுடன் வாய் பிளக்க
உயிர் பதற இழுத்துச் செல்லப்படுகிறேன் உள்ளே
எனக்கொரு உலகம் பரிசளிக்கப்படுகிறது
காலூன்றவும் கனவுகள் வரையவும்
நிலமற்றதான பொழுது
தலைக்கு மேல் வன்முறையாக இறங்குகிறது
அதிகாரத்தின் உக்கிரம்


என் காதுகளிலும்
பொய்க்கால் முளைத்த ஊடகப் புரவி
புழுதி கிளப்பிப் பறக்கிறது
நாசித் துவாரங்களில் ஒட்டுகிறது
அதிகார வெளி அசுத்திகரித்த காற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல்வளையும் வெட்டுண்டு சிரசு தொங்க
கழுகுகள் புணர்ந்து பெருத்தன விலைவாசி
என் கண்களும் சிதைய
நான் வாசிக்கவும் நேசிக்கவுமற்றுப் போனேன்
பிரவாகித்துப் பொங்கிடுமொரு வாழ்வை
இனியும்
புலனற்றுச் சடமாய் கிடத்தல்
விதியாயிற்று நெடுகிலும்
நிலத்துண்டும் இற்றுப்போன ஜீவிதத்தில்
வன்முறையாய்
அடுத்த தலைமுறைக்குப் பரிசளிக்க
என் கைகளில் திணிக்கப்படுகிறது
வாக்கோலையாய் பட்டோலை வாக்குச் சீட்டு

2009 பெப்ரவரி 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நுணல்வாய்

10408

இரவிரவாய்க் கத்திக் கிடந்தன
புலர்ந்த பின்
வயிறு கிழிந்து செத்துக் கிடந்தன
மழை மீது தப்பு என்ன?

2009 பெப்ரவரி 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மையித்துக்களால் எழுதப்படும் விடுதலை

இருளின் விச நாவை நீட்டி
படமெடுத்தாடுகிறாய்
யூத சர்ப்பமே
காஸாவின் கற்பத்தில் வீறிடும்
விடுதலையின் வேர்ச் சொற்களில் வதையுறுவாய்

நீ ஊர்ந்து திரியவும் நிலத்துண்டற்றவன்
அரபு வேரில் பருகியே
உயிர் நீண்டவன்
யூதப் பூதமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொருங்கிப் பிரவாகிக்கும் உணர்வுகளின்
சிதறலில்
மீளவும் உயிர் துடிக்கிறது
என் விடுதலையின் ஆதிச் சொற்களில்
இன்திபாழா இன்னொரு தயணம்
எழுந்து கூவுகையில்
உன் ஆக்கிரமிப்பின் அதிகார வெளி
தூசுறும்

நாளையும் இருட்டலாம்
விச நாவை நீட்டிப் படமெடுத்தாடலாமென
நப்பாசையில் நீ
என் உணர்வுகளை எங்ஙனம் தீண்டுவாய்
ஒலிவம் சிறகுகளால் எமக்கான
வானத்தை வரையவும்
ஸைத்துன் விதைகளால் எமக்கான
நிலத்தை விதையிடவுமாக
கபனிடப்பட்ட தேசத்தின்
வேரில்
மையித்துக்கள் விடுதலையை
எழுதிச் செல்கையில்

2009 பெப்ரவரி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயல்பினை அவாவுதல்

இரண்டு கால்களையும்
என் மென்மண்ணிலூன்றி
இரு கைகளாலும் வானத்தை அவாவிய படி
நிமிர்ந்து நின்றே இசைப்பேன்
நிலவு மீதான பாடலொன்றை
சொல்,
உனதும் உனது எதிரியினதும்
நிராயுதங்களையே நான் அவாவுவதாய்
சொல்

ஆயுதங்கள் சம்பவிக்கும்
இடர் கவிந்த யுகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழியில் கிடத்தல் விதியாயிற்று
இற்றை வரைச் சவமாய்
குழியைச் சுற்றிலுமாய் சவவெளியில்
எனதும் மீள முடியாக் கனாக்களும்
இளமைக்கால ஓவியங்களும்
வாழ்வின் வர்ண நிறங்களும்
எலும்புக் கூடாயும் ஆவியாயும் அலைகின்றன
அவாவின் மீதத்தில்

சொல்
நான்
உனதும் உனது எதிரியினதும்
நிராயுதங்களையே அவாவுவதாய்ச் சொல்

நேற்றும்தான்
பேய்களின் கூத்துப் பரணியில்
தானும் இறக்கை கருகிச் செத்ததாய்
என் அயல் வீட்டுக் குருவி
கனவில் சொல்லிய இரவில்
எண்ணிக்கை அளவற்ற குருவிகள்
உயிரீந்து வீழ்ந்தன கனவும் கலக்கமுற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கிழட்டுப் பேய்கள் காய்ச்சிய கூழை
அள்ளி ருசித்துக் கொண்டாடின
சில கழுகுகளும் சிறகற்ற மரங்கொத்திகளும்
உயிரீந்து வீழ்ந்தன குருவிகள்
அவாக்களையும் ஓவியங்களையும்
வர்ணங்களையும் எங்கு பரவினவோ
சொல்
அவைகளுக்காகவும் கூவுகிறேன்

நான்
உனதும் உன் எதிரியினதும் எவனினதும்
எல்லாத் திசையினதும்
வெண்ணிறப் பூக்களையே
அவாவுவதாய்ச் சொல்

2009 மாரச் 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# உள்முகங்கள்

தேநீர் கோப்பையைத் தந்துவிட்டுச் செல்கிறாள்
சுடச் சுடப் பருகுகிறேன்
மாலை அயர்வில் இதமாகிறது மனசு
தேநீரை ருசிக்கையில்
தேயிலைத் தோட்டத்தில் சிந்திய சாயம் உறைந்த
மலையுச்சிக் கொழுந்து வெயில் கொதிக்கிறது
உதட்டில் இதம் கருகிப்போக
கரும்பு வனத்தில்
சாறாய்ப் பிழிந்த உழைப்பின் சக்கை
துயராய்க் கசக்கிறது
என் கோப்பைக்குள் இறங்குகிறது
வாழ்தலின் யதார்த்தம்

வெறும் கோப்பையை எடுத்துச் செல்கிறாள்
மனைவி
முகத்தில் அயர்வின் சாயல்

2009 மே 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துயர் கவியும் உயிர் மீதான பாடல்


ஏழாயிரத்து சொச்ச தினங்களாய்
துயர் கவியும் பாடலொன்றை
இசைத்தபடி அலைந்தாய்
ஈற்றிலொரு நாள்
வறுமைக் கயிறு குரல் வளை நசுக்கிற்று
உன் கீதம் இறக்கையில்
சிறகுகள் கனன்று சிதிலங்களாகி
உணர்வுகள் வியாபிப்பதையும்
பாராமுகங்களில் அறைந்து உறைவதையும்
அகமுறுகிறேன்

பொதுசன நூலகம்
பகுதி
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் எதிர்ப்பிசையின் கீழ்
புயலும் அடங்கலாமினி
இருபதாவது வட்சரமாவது
உன் மகன் மண் ஏகுவான்
உன் துயர் கவியும் பாடல்
மெல்லிய புன்னகையுடன்
வெளியெங்கும் பரவுவதை அப்போது
அவன் கேட்டிருத்தல் கூடும்

2009 ஜூலை 16
(கற்பிட்டி அகதி முகாமொன்றில் தூக்கிலிட்டு தற்கொலை
செய்து கொண்ட தாயொருத்தியின் நினைவுகளுக்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருள்வெளியும் நாளைய சூரியனும்

முட்கம்பிகளினாலானது
வாழ்தலின் எல்லை
அற்றைக் காத்திருந்த இலக்குகள் தொலைந்தன
உயிரீந்து வளர்த்ததான
சூரியனும் கருகிச் செத்திற்று
இருளிடம் கையேந்திப் பயனென்ன இனி
காற்றிடம் கேட்கலாமெனில்
அசுத்தமேறி நாற்றமடிக்கிறது
திசைகளும் கண் பொத்தி மறைகின்றன
முட்கம்பிக்குள் சிறைப்புற்ற
வாழ்தலின் எல்லை விரிவதெங்ஙனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படர்வுறும் முட்கம்பிச் செடி
கிளைப்பதில்லை துளிர்ப்பதில்லை
காய்ப்பதில்லை கனிவதுமில்லையெனின்
குயிலாய்க் கூவித் தோப்பாகும்
கனவுகளுமற்றுப் போக
குரல் கிழிந்து தொங்குகிறது
முட்கம்பி வேலிகளில்
முகாமில் என் பேரன்
சிறு துரும்பெடுத்து
புதிதாய் சூரியனை வரைதல் கூடும்

அந்தச் சூரியப் புறாவெழுந்து
வாழ்தலை பொழிதல் வேண்டுமினி

2009 ஆகஸ்ட் 09
(வவுனியா அகதி முகாம்களில் இடருறும் வன்னி
மக்களின் நினைவுகளுக்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆவியும் மூன்று பூக்களும் கழுகுச் சிறகுகளும்

தூக்கமற்றுப்போன நடுநிசியில் எழுதுகிறேன்
ஒற்றையறை வாழ்தலில்
என்னோடு சங்கமித்துப்போன
பூக்கள் ஆழ்ந்து சயனிக்க
என் ஆவி கனன்று வெளியில் எங்கேயோ
தொலைவு வரை தொலைந்து மீள்கிறது
நிசப்தம் கவ்விய இருட் போர்வையில்
சப்திக்கிறது ஆவி
அதனுள் புதைந்ததான
அவாக்களையும் அதிகனாக்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரறிவர்
தூக்கமற்றுப்போன நடுநிசியில் மீண்டும் எழுதுகிறேன்
துயர் மண்டுதல் வாழ்தலின் நியதியெனில்
துயரினும் துயராய் வந்தமர்கின்றன
கழுகுகள்
ஆயிரத்து ரெண்டாவது சிறகுகளையும் விரித்தெழுந்து

மெல்ல இருட் போர்வையுள்ளிருந்து
வெளியேறுகிறது ஆவி
சயனித்துக் கிடக்கும்
பூக்கள் மீதினும் அன்பை அள்ளிப் பூசியபடி
ஆவி புறப்படுகிறது
இனிக் கழுகுகள்
ஆயிரத்து மூன்றாவது சிறகாலும் பறந்தெழலாம்
என் பூக்கள் மீதில் தன் முட்களையும் பாய்ச்சலாம்
என் ஆவி மீது கவியும்
மூன்று பூவினதும் மூச்சு தீயாகிவிடும்

2009 ஆகஸ்ட் 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதிய வேர்களால் ஆதல்

தேசப்படத்தின் எங்கோ ஒரு முனையில்
தொலைந்துவிட்ட சிறு புள்ளியல்ல
நீ இழந்தவற்றுள்
உன்னதமானது உனது ஊரும் ஊரினது நினைதல்களும்
நீரூற்றுப் போல

வெறுமையால் வெளியேற்றப்பட்டது
உனதான இருப்பு
உசுப்பிவிடச் சிதறிய சருகுகளாய்
அள்ளூண்டு எல்லாத் திக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைந்துழல்வு தொடர்ந்திற்று
முடிவிலியாய் முகவரியற்றதாயிற்று

நீ
எதிர்பார்த்ததே இல்லை
சோகங்களிலும் துயரமானது விரட்டியடிப்பு
இரு தசாப்தங்களாய்
இடர் கவிய வாழ்ந்து தொலைந்தாய்

நீ
எதிர்பார்த்ததே இல்லை
மகிழ்தலிலும் மகிழ்வாய் மீளமர்வு
சிறு குருவியாய் வந்தமர்கிறது
உன் மனசு சிறகடிக்க

கண் மூடித் திறப்பதற்குள் நிகழ்ந்தாயிற்று
நீ
கனவிலும்
கண்டிரா காட்சியது
உன்
பிரார்த்தனையில் வலிமைமுன்
உன்னைத் துரத்திய புயல் அடங்கிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசின் முளையில் துளிர்க்கிறது
புதியதொரு வேர்
மண்ணின் வியர்வையூற்றி விளைந்தவனே
ஊர் போகும் ஆவலின்
கனவுகளும் ஆசைகளும்
எதிர்பார்ப்புகளும் கூர்கின்றன

ஊர் பற்றிய படத்தை வரையத் தொடங்குகிறாய்
உன்னைப் போல்
அவரவரிடமும் வரைபடங்கள் முளைக்கின்றன

எல்லா வரைபடங்களையும் கலந்தொரு
புதிய வரைபடம் செய்தல் வேண்டுமினி

ஓர் அமீரின் கீழ் ஒரே ஜமாஅத்தாய்
புதிய வேர்களால் ஆதலுக்காய்

நாளை பிறை விருட்சமொன்று வியாபிக்கையில்
பூர்வீகத்தின் வேரும் பூரிக்கலாமினி

2009 ஒக்டோபர் 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10408

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேகரிப்புப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லை முஸ்ரிபாவின் கவிதைகளில்
தாகம், ஏக்கம், அதிருப்தி, துயர் மண்டிய
வாழ்வு பற்றிய கோலங்கள்
கவிதா இழைகளாக இருந்தாலும்
வாழ்வின் மீதான ஈரக்காதலையும்
நளினத்தையும் நம்பிக்கையுடன்
அவர் எங்களுக்குத் தருகிறார்



அவருக்குரிய மிகவும் அழகான
கவிதைக் கோலம் என்னவென்றால்
பாரதி கூறியது போல
'விட்டு விடுதலையாகி நிற்கும்
ஒரு சிட்டுக் குருவி' முகம் தான்.

அவருடைய இனிய மொழியில் சொல்வதானால்
அவர் ஓர் எதிர்ப்பிசைக் குருவி.
நல்ல கவிஞன் எதிர்ப்பிசைக் குருவியாக அன்றி
ஒத்தோடிக் குருவியாகவா
இருக்க முடியும்?

ISBN 978-955-0280-00-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org